நிர்வாகத்தினரே முன்வந்து கொடுத்தார்களா அல்லது இவர்கள் கேட்டுக் கொடுத்தார்களா? அப்படிக் கேட்டது யார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களும் அந்தக் கேள்வியைத்தான் கேட்டார்கள். யார் கேட்டார்கள், யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எல்லாம் இல்லை. ஆலய நிர்வாகம் என்பது அந்தந்த அறங்காவலர்களைப் பொறுத்ததுதான். 15 கோயில்களிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தான் இருக்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 15 கோயில்கள் இப்படிப்பட்ட ஆயுள் சந்தா ஆயிரம் ரூபாய் வீதம் முரசொலி பத்திரிகைக்குக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த ஆயுள் சந்தா எந்த ஆண்டிலிருந்து பெறப்பட்டது? அதைப்போல இந்த ஆயுள் சந்தாவை அந்த நேரத்தில் கொடுத்த அதிகாரிகள் யார், யார்? இங்கே கோயில் விதிமுறைகளை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த விதிமுறைகளுக்கு மாறாக அன்றைய தினம் ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1975 ஆம் வருடத்திலேதான் இந்த ஆயுள் சந்தா தொகை செலுத்தப்பட்டுள்ளன. முறை தவறாக ஆலயத்தின் நிதி செலவழிக்கப்படுமேயானால் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் அறங்காவலர்கள். அவர்களிடத்திலேயிருந்துதான் அதைத் திரும்ப வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆக இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு.

*வினா எண். 47—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட பெரியார் வரலாறு தொகுக்கும் குழு தனது பணியை முடித்து விட்டதா?

(ஆ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன?

1981 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) '' பெரியார் புரட்சி மொழிகள் '' என்னும் நூல் தயாரிக்கப்பட்டு செப்டம்பர் 1979-ல் வெளியிடப்பட்டது.

தந்தை பெரியார் ', வாழ்க்கை வரலாறு ' என்ற நூல் தயாரிப்பு பணிகள் அக்டோபர் திங்களில் தொடங்கப்பட்டு, ஆதாரங்களையும் குறிப்புகளையும் திரட்டும் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது.

ஏனைய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை தொகுக்கின்ற பணி யார் யார் அடங்கிய குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும் அந்தக் குழு தனது பணி முழுவதையும் முடித்துவிட்டதா என்பதையும் எங்களைப் போன்ற சாதாரண சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்—நான் எல்லோரையும் சொல்லவில்லை—அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, பெரியார் நூற்றாண்டு விழா குழு என்ற ஒரு பொதுவான குழு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்களின் வரலாற்று நூலைத் தயாரிப்பதற்கென்று தமிழ் மொழி வளர்ச்சித் துறையின் இயக்குநராக இருக்கின்ற டாக்டர் நன்னன் அவர்களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு இயங்கிக் கொண்டிருக்கின்றது. நூல்கள் தயாரிப்பதிலே தேர்ச்சி பெற்ற தமிழறிஞர்களும் அவர்களுக்கு உறுதுணையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பது பிரச்சினை இல்லை. யார் யார் அதற்குப் பயன்படுவார்களோ அவர்கள் அதிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பெற விரும்பிய பதில் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தக் குழுவிலே சேர்த்துக்கொள்ளப் பட வேண்டும் என்பதல்ல. அந்தக் குழுவிலே யார் யார் அடங்கி இருக்கிறார்கள் என்ற வினாவைத்தான் நான் பணிவோடு கேட்டுக்கொண்டேன். அதுமட்டுமல்ல. அந்த நூல்

வெளியிடப்படுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டாவது அந்த நூலை அவர்களுக்குத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு வெளியிடுகின்ற நூலை, அதாவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் குறிப்பிடுகின்ற நூலை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணம் இன்றியே வழங்குகின்ற வகையிலே ஒரு ஆலோசனையை, பரிந்துரையை மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடம் கொடுத்து அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதை ஆறு பகுதியில் நில ஆக்கிரமிப்பு.

*வினா எண் 48—**திரு. மி. வின்செண்ட், திரு. ஜே. ஹேமச் சந்திரன், திரு. டி. மணி:** மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பாலமோர் தோட்டத்திற்கு மேலே, மேல் கோதையாறுக்கு கீழே காலியாக இருக்கும் சுமார் 400 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் தனிப்பட்ட முதலாளிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது, அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) பாலமோர் தோட்டத்திற்கு மேலே, மேல் கோதையாறுக்கு கீழே வரும் நிலப்பரப்பு ''வீரப்புலி ஒதுக்கப்பட்ட காடுகள்'' எனப்படும். இதில், வனத்துறையினரால் 341 ஏக்கர் நிலம் சுமார் 15 பேர்களுக்கு 1963 ம் வருடம் முதல் நீண்ட கால குத்தகையாக ஏலக்காய் சாகுபடிக்கு என்று கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் அரசு நிலங்களை பெரும் பணக்காரர்கள் குத்தகை என்ற பெயரால் பல ஆண்டுகளாக வைத்துக்கொண்டு வருகிறார்களே, அதை மீட்டு ஏழைகளுக்கு வழங்குகின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.